# உடல் உறுப்பு தானம் போதவில்லை



பெட்டாலிங் ஜெயா, ஆக. 17-

நோயாளிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. எனினும் உடல்உறுப்பு தானம் செய் வோரின் எண்ணிக்கை போதிய தாக இல்லை என மலேசிய தேசிய சிறுநீரக அறநிறுவனம் தெரிவித்தது.

சிறுநீரக சுத்திகரிப்பு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதி கம். பலருக்கு மாற்று சிறுநீரகம் மாற்று தேவைப்படுகிறது. உடல் உறுப்பு மாற்றத்திற்காக 20,000 க்கும் மேற்பட்ட நோயாளிகள் காத்திருக்கிறார்கள்.

இதில் ஏறத்தாழ 90 விழுக் காட்டினர் மாற்று சிகிச்சைக்காக காத்திருக்கிறார்கள். இறுதிக்கட்ட சிறுநீரக பாதிப்புக்கு ஆளானவர் களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக இந்த அறநிறுவனத்தை சேர்ந்த டாக்டர் பட்லினா ஜக்காரியா தெரிவித்தார்.

உறுப்பு தானம் செய்ய முன் வந்தவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்திற்கும் குறைவாக இருக்கிறது என்று இவர் குறிப் பிட்டார். சிறுநீரக சுத்திகரிப்பு நோயாளி மாற்று சிறுநீரகத் திற்காக 12 வருடம் முதல் 15 ஆண்டுவரை காத்திருக்க வேண் டியுள்ளது. உறுப்புதான திட்டம் குறித்து மக்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு நிகழவேண்டும் என்றும் டாக்டர் பட்லினா அறிவுறுத்தினார்.